## ஆண்டின் பொதுக்காலம் நான்காம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு - B

## 2024-01-28

(*இன்றைய வாசகங்கள்:*

*இணைச்சட்டம் நூலிலிருந்து வாசகம்* 18:15-20,

*திருப்பாடல்கள்:* 95: 1-2, 6-9 ,

*திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்* 7:32-35,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 1: 21-28)

***திருப்பலி முன்னுரை***

*இறை இயேசுவில் அன்புநிறை சகோதரர்களே சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் இயேசுவின் பெயரில் என் அன்பையும் வாழ்த்தையும் உரித்தாக்குகிறேன். ஆண்டின் பொதுக்காலம்* 4 *ஆம் வாரத்திலிருக்கும் நாம் இன்று சிறப்பாக இயேசுவின் பணியைத் தொடர்ந்தாற்ற அழைக்கப்படுகிறோம். இந்த சிறப்பு நிலையைப் பெற இன்றைய இறை வாக்குகளின் ஊடாக நம் சிந்தனைகளை செலுத்த விழைவோம்.*

*இயேசுவின வாழ்வு என்றுமே "உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள் , ஆண்டவர் குரலுக்குச் செவிசாய்ப்பீர்" என்று கூறி நம்மைக் சிந்திக்க அழைக்கிறது ஆண்டின் பொதுக்காலம் நான்காம் ஞாயிறு. தீய சக்திகளாகிய இருளாட்சியை, ஆதிக்கத்தை, அக்கிரமத்தை அழித்தொழித்து இறையாட்சியை நிலை நிறுத்தி செயலாக்கிட நம்மை அழைக்கிறார் நம் இறைமகன் இயேசு கிறிஸ்து. தீமையின் ஒட்டுமொத்த உருவமாயிருக்கின்ற சுயநலம், சுரண்டல், அடிமைத்தனம், சாதி, பயங்கரவாதம், பாலியல் வன்கொடுமை, அடக்கியாளும் அதிகாரம், பிளவுப்படுத்தும் எண்ணம், ஏழைப் பணக்காரன், போட்டி பொறாமை ஆகிய அனைத்தும் சிறிய பெரிய விதங்களில் நம்மையும், நமது குடும்பத்தையும் சமுதாயத்தையும் ஆட்டி அலைக்கழித்து வரும் இந்த தீய சக்திகளை எதிர்த்து வாழும்போது இறைவனுக்கு உகந்தவர்களாக, மகிமையானவர்களாக மாறுவோம். நாம் அத்தகைய மகிமையை அடைய இத்திருப்பலியிலம் மன்றாடுவோம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*அனைவரும் என்னைப் போல இருங்கள் என்று சொன்ன எம் இறைவா!*

*உம் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள, குருக்கள, கன்னியர் பொதுநிலையினர் அனைவரும் உம்மைப்போல வாழ்ந்து தங்களது வாழ்வால் மற்றவருக்கு நற்செய்தியை அறிவித்திட தேவையான அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*எங்களையெல்லாம் பராமரிக்கும் நல்தெய்வமே,*

*நவீனம் என்னும் பெயரில் கலாச்சாரத்தையும, பண்பாட்டையும் துளைத்து நிற்கும் இச்சமுதாயத்திற்காக மன்றாடுகிறோம். நாங்கள் வாழுகின்ற நிலையில் மற்றவரின் உணர்வுகளை மதிக்கவும் தனி மனித சுதந்தரத்திற்கு மதிப்புக் கொடுக்கவும் தேவையான அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*அரசருக்கெல்லாம் அரசரே எம் இறைவா!*

*நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும், துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும் , நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*எமைப் படைத்து ஆளும் எம் இறைவா!*

*திருஅவையின் அச்சாணிகளாய் இளைஞர்களை உருவாக்க அவர்களின் பெற்றோர்கள் எடுக்கும் முயற்சிகள் வெற்றிப் பெறவும், தம் தூயவாழ்வால் இவ்வுலகம் அவர்களைத் திரும்பிப் பார்க்கின்ற இயேசுவின் சீடர்களாய் மாறிடத் தேவையான ஞானத்தையும், திறமைகளையும், மன உறுதியையும் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*வழிபாட்டின் நாயகரே எம் இறைவா!*

*இன்றைய சூழலில் வழிபாடுகள் வெறும் வெற்றுச் சடங்குளாக அல்லாமல் அர்த்தமுள்ளதாக அமையவும், வழிபாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து வாடிக்கையான ஒரு செயலாக இல்லாமல் பொருள் உள்ள வழிபாட்டின் முழுநிறைவையும், முழுமையாகப் பெற்றுத் திருமுழுக்கு யோவானைப் போல் சாட்சிய வாழவு வாழத் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*கருணையின் உருவே இறைவா!*

*நாங்கள் ஏழை எளிய மக்கள் மேல் அன்பு கொண்டு வாழவும், அவர்களின் தேவைகளில் உடனிருக்கவும், பிறரின் துன்பங்களைத் தன் துன்பங்கள் போல் ஏற்று வாழவும் வரமருள வேண்டும் என்று மன்றாடுகிறோம்.*

*துன்பத்தில் ஆறுதல் தரும் இறைவா!*

*நோயினால் அவதிப்படுகின்ற உம் மக்களைக் கண்ணோக்கிப்பாரும். நீர் அவர்களின் துன்பத்தில் ஆறுதலாக இருந்து, நோயிலிருந்து விடுதலை கொடுக்கவும் வேண்டிய அருளைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*